DEPOSITION OF WITNESS
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.I, BHAVANI
PROSECUTION WITNESS

DVC. No. 08/2021 Crime No. - Station -

| | | | |
|---|---|---|---|
| Name | PW-1-ரதிதேவி | Village | |
| Father Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of Oath Act the day of | | | 12.05.2025 |

**எதிரி ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் இவ்வழக்கில் புகார்தாரர் ஆவேன். எனது முதல் விசாரணைக்கான சங்கதிகளை சத்திய பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் சத்திய பிரமாண வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதில் என்ன கூறியுள்ளது என்று எனக்கு தெரியும். கீழ்காணும் ஆவணங்களை எனது தரப்பு சாட்சி ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

**1) 26.08.2021 ம் தேதி, மனுதாரரின் விளக்கக் கடிதம் அசல் ம.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**2) 21.08.2002 ம் தேதி, திருமண அழைப்பிதழ் நகல் ம.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**3) 21.08.2002 ம் தேதி, திருமண புகைப்படம் நகல் ம.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**4) 21.04.2004 ம் தேதி, மனுதாரர் மகன் பார்த்திபனின் பிறப்புச் சான்று நகல் ம.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**5) வகுப்புச் சான்றிதழ் நகல் நகல் ம.த.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**6) 15.07.2021 ம் தேதி, மனுதாரரின் புகார் மனு நகல் ம.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

புகாரில் கோரியுள்ளபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நீங்கள், எதிர்மனுதாரர் மீது பாதுகாப்புக் கோரியும், நீங்கள் தங்கியுள்ள வீட்டில் எதிர்மனுதாரர்கள் எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என்றுதான் மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால், சரிதான். உங்களுக்கும், 3ம் எதிர்மனுதாரரும் திருமணத்திற்கு பின்னிட்டு எத்தனை வருடங்கள் ஒன்றாக இருந்தீர்கள் என்றால், 40 நாட்கள் இருந்தோம். அதில் 3ம் எதிர்மனுதாரர் வரதட்சணை கேட்டு தொந்தரவு செய்தார். நீங்களும், 3ம் எதிர்மனுதாரரும் எத்தனை வருடங்களாக பிரிந்து வாழ்ந்து வருகிறீர்கள் என்றால், 21 வருடங்களாக பிரிந்து வாழ்ந்து வருகிறோம். ஆனால் கடந்த 6 வருடங்களாக வீட்டை கேட்டு அங்கு உள்ளேன்.

நீங்கள் மாவட்ட ஆட்சியரிடம் உங்கள் கணவர் மீது புகார் கொடுக்கவில்லை என்றால், சரிதான். அப்போது அவருக்கு உடல்நிலைய சரியில்லை, அதனால்தான் புகார் கொடுக்கவில்லை. பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 2 முதல் 7 வரையிலான சங்கதிகளை தற்போதுதான் நீதிமன்றத்தில் கூறுகிறீர்கள் என்றால், சரிதான். நீங்கள் முதல் விசாரணையில் சொன்னதுபோல்

எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், நீங்கள்தான் எதிர்மனுதாரர்களிடம் வீட்டை வாங்குவதற்காக பிரச்சனை செய்து வருகிறீர்கள் என்றால், சரியல்ல. நீங்கள் முதல் விசாரணையில் சங்கதிகள் யாவும் உண்மை என்றால், நீங்கள் மாவட்ட ஆட்சியரிடம் கொடுத்த புகாரில் கூறியிருப்பீர்கள் என்றாலும், அவரது விசாரணையில் சொல்லியிருப்பீர்கள் என்றாலும், தற்போது வழக்கிற்கு வலு சேர்க்கும் விதமாக பொய்யான சங்கதிகளை அதிகப்படுத்தி சொல்கிறீர்கள் என்றால், சரியல்ல.

மேற்படி வீடானது உங்களது மாமனார் பெயரில் உள்ளது என்றால், சரிதான். மேற்படி சொத்தானது ஆவணம் எண்.299/1995, நாள் 15.09.1995 ஐ உங்களது மாமனார் சுயமாக வாங்கினார் என்றால், சரியல்ல. பூர்வீக சொத்தை விற்றுத்தான் வாங்கினார். நீங்கள் தாக்கல் செய்த மனுவில் உங்களது மாமனாரின் தனிப்பட்ட சொத்தில் உரிமை கோர முடியாது என்றால், சரியல்ல. 21 வருடங்கள் கழித்து இவ்வழக்கை தாக்கல் செய்ததால் இவ்வழக்கானது நிலைக்கத்தக்கதல்ல என்றால், சரியல்ல. நீங்கள் உங்களது கணவரிடம் மேற்படி சொத்தை உங்களது பெயருக்கு மாற்றக்கோரி பிரச்சனை செய்ததால்தான் உங்கள் கணவர் முடியாது என்று கூறியதற்காக அவரையும், உங்களது மாமனாரையும் பழிவாங்கும் நோக்கில் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால், சரியல்ல.

மேற்படி இடத்தை எப்படியாது பெற வேண்டும் என்ற காரணத்திற்காகத்தான் 21 வருடங்கள் கழித்து இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றால், சரியல்ல. 6 வருடங்களாக அங்குதான் இருந்து வருகிறேன். எதிர்மனுதாரர்கள் தண்ணீர் பைப்பை அவ்வப்போது அடைத்து விடுகிறார்கள். 1ம் எதிர்மனுதாரரின் வீட்டின் முன்பு CCTV உள்ளது என்றால், சரிதான். என்னிடம் தற்போது காட்டப்படும் புகைப்படத்தில் பச்சைக் கலர் ஆடை அணிந்தவர் நீங்கள் என்றும் ஆரஞ்சுக் கலர் ஆடை அணிந்தவர் உங்களது மாமியார் என்றால், சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உங்களது மாமியார் கீழே விழுந்தும், நீங்கள் மேலே இருக்கிறீர்கள் என்றால், சரிதான். எனது மகனை நான் அடிப்பதைப் பார்த்து எனது மாமியார் என்னை அடித்து சாக்கடையில் தள்ளிவிட்டார்.

நீங்கள்தான் உங்கள் மாமியாரை அடித்து காயப்படுத்தினார்கள் என்றால், சரியல்ல. முதலில் என் மாமியார்தான் என்னை அடித்தார். இவ்வழக்கிற்கு எவ்வித முகாந்திரமும் இல்லாமல் பழிவாங்கும் நோக்கிலும், சொத்தை அபகரிக்கும் நோக்கிலும், இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளீர்கள் என்றாலும், இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றாலும், சரியல்ல.

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.